தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 81/ந/2022
நாள். 04.08.2022

திரு.P.சுப்பிரமணியம்,
திருமுருகன்பூண்டி. – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
திருமுருகன்பூண்டி நகராட்சி,
திருப்பூர் மாவட்டம் – எதிர் மனுதாரர்

திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், திருமுருகன்பூண்டி போஸ்ட், மெயின் வீதி, ஜீவா படிப்பகம், என்ற முகவரியில் வசிக்கும் தற்போதைய நகராட்சியின் நகர்மன்ற உறுப்பினரான திரு.P.சுப்பிரமணியம் என்பவரின் 15.06.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.06.2022 அன்று பெறப்பட்டு 081/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், திருமுருகன்பூண்டி போஸ்ட், மெயின் வீதி, ஜீவா படிப்பகம், என்ற முகவரியில் வசிக்கும் நகர்மன்ற உறுப்பினர் திரு.P.சுப்பிரமணியம் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“திருப்பூர் மாவட்டம், அவிநாசி தாலுக்கா, திருமுருகன்பூண்டி பேரூராட்சி தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

2011–ம் ஆண்டு தேர்தலில் திருமதி. லதா சேகர் என்பவர் வெற்றி பெற்று மூன்று மாதங்களிலேயே குடும்பப்பணி காரணமாக பதவியை ராஜினாமா செய்துவிட்டார். அதன்பின் 2014–ம் ஆண்டு நடைபெற்ற இடைத்தேர்தலில் திரு. பழனிச்சாமி என்பவர் வெற்றி பெற்றார்.

2011 முதல் 2021 வரை ஆயிரக்கணக்கான வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு எவ்விதமான பேரூராட்சி அனுமதியும் இல்லாமல் இணைப்பு கொடுத்துள்ளனர். இக்கால கட்டத்தில் பணியாற்றிய செயல் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். இதுபற்றி தொடர்ச்சியாக நாங்கள் செயல் அலுவலர்களிடம் முறையீடு செய்துள்ளோம். இறுதியாக திரு. ஈஸ்வரமூர்த்தி, EO அவர்களிடமும் முறையீடு செய்தபோது அவர் சட்ட விரோத குடிநீர் இணைப்பு உள்ளவர்கள் அபராதமாக ரூ.28,000/– கட்டி முறைப்படுத்திக் கொள்ளுங்கள் என உத்தரவிட்டார்கள்.

அதன்படி இதுவரை 860–க்கும் மேற்பட்டவர்கள் அபராதம் கட்டியுள்ளனர். இதுபோக குடிநீர் இணைப்பு இல்லாமலே அபராதம் கட்டிவிட்டு, அதன்பின் குழாய் இணைப்பு போட்டவர்களும் உண்டு. முறைகேடாக இணைப்பு போட்டவர்கள் மீதும், இப்படி போடுவதற்கு துணையாக இருந்த அரசியல்வாதிகள், அதிகாரிகள், பிளம்பர்கள் ஒன்று சேர்ந்து பல கோடி ரூபாய் வருமான இழப்பு ஏற்படுத்தியவர்கள் மீதும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

குழாய் போடாமல் அபராதம் கட்டிவிட்டு அதன்பின் குழாய் இணைப்பு போடும் போது 22–வது வார்டில் அன்பு இல்லம் செல்லும் ரோட்டில் (இந்த ரோடு பொங்கவளி கிராம ஊராட்சி சேர்ந்தது) 300 அடி நீளத்திற்கு 3 இன்ஞ் அளவில் பிளம்பர் முருகேசன் என்பவர் 26.05.2022 அன்று குழாய் போடுவதை அறிந்த 22–வது வார்டு உறுப்பினர் பார்வதி கைப்பிடியாக பிடித்து தலைவர், கமிஷனர் ஆகியோரிடம் புகார் செய்து அவர்களும் பார்வையிட்டு குழாய்களை 27.05.2022 அன்று அகற்றியுள்ளனர்.

மேலும் 18–வது வார்டிலும் ராஜ்குமார் என்பவர் வீட்டிற்கும் குழாய் இணைப்பு போடப்பட்டுள்ளதை அறிந்து தலைவர், கமிஷனர் ஆகியோர் சென்று ஆய்வு செய்து 21–ம் ஆண்டு அபராதம் செலுத்திவிட்டு 22–ம் ஆண்டு மே மாதம் குழாய் இணைப்பு பிளம்பர் முருகேசன் போட்டுள்ளதை அறிந்து 27.05.2022 அன்று துண்டிப்பு செய்துள்ளனர்.

மேலும் குழாய் போட்டுவிட்டு ரூ.28,000/– அபராதம் கட்டாதவர்களிடம் இணைப்பு தருவதற்கு காரணமானவர்கள் இணைப்புகளை துண்டிக்கும்படியும், தற்போதுள்ள பிரச்சனைகளை முடித்தபின் இணைப்பு செய்யலாம் எனவும் கூறி பல வீடுகளில் உரிமையாளர்களே இணைப்பை துண்டித்து உள்ளனர்.

மேலும் 1–வது வார்டு செர்ரி பிளாசம் பகுதியில் 28 வீடுகள் பொறியாளர் ஒருவர் கட்டி விற்றுள்ளார்கள். இதில் 28 வீடுகளுக்கும் மெயின் குழாய் வீட்டு இணைப்பு குழாய்களும் போடப்பட்டு மேல்நிலைத் தொட்டியில் இருந்து சுமார் 1 பர்லாங் நீளத்திற்கு குடியிருப்பு வரை ரோட்டில் 3 இஞ்ச் குழாயும் பதித்துள்ளனர் ; ஆனால் குடிநீர் இணைப்பு தரப்படவில்லை. இவை அனைத்தும் நகராட்சியில் எந்தவிதமான உத்தரவும் இல்லாமல் தன்னிச்சையாக போட்டுள்ளனர். தற்போதைய நகராட்சி நிர்வாகமும் நடவடிக்கை எடுக்க தயங்கி வருகிறது. 2016–ல் தகவல் கேட்டபோது 8346 இணைப்புகள் உள்ளன என பதில் கூறியுள்ளனர்.

யாருடைய உத்தரவின் பேரில் 1500–க்கு மேற்பட்ட குடிநீர் இணைப்பு தரப்பட்டது, குழாயே போடாமல் அபராதம் கட்டிவிட்டு அதன்பின் குழாய் போடுவதற்கான யோசனை கொடுத்தவர்கள் யார் எனவும், முறைகேட்டினால் கடந்த 10 வருடங்களாக நிர்வாகத்திற்கு பல கோடி வருவாய் இழப்பு ஏற்படுத்தி உள்ளவர்கள் மீதும் விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 23.06.2022 நாளிட்ட கடிதம் மூலம் திருமுருகன்பூண்டி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

திருமுருகன்பூண்டி நகராட்சி ஆணையாளர் தனது 20.07.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"திருமுருகன்பூண்டி பேரூராட்சியானது 16.12.2021 அன்று முதல், நகராட்சியாக் தரம் உயர்த்தப்பட்டு நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. பேரூராட்சியாக இருந்த போது 2011 முதல் 2021 வரை முறைகேடான முறையில் குடிநீர் குழாய்கள் பேரூராட்சி தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் மூலம் அமைக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டவுடன் முறையற்ற குடிநீர் இணைப்புகளை கண்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள, பேரூராட்சியில் மொத்தமாக ஒரு செயல் அலுவலர், ஒரு இளநிலை உதவியாளர், ஒரு வரிவசூலர் மற்றும் 8 தூய்மை பணியாளர் பணியிடம் மட்டுமே இருந்த நிலையில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் அருகில் உள்ள பேரூராட்சியிலிருந்து கணக்கெடுப்பு பணிகள் செய்ய தேவையான அலுவலர்களை நியமிக்க தீர்மான எண். 804/2020 நிறைவேற்றப்பட்டு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.173/2020/ப3 நாள்.12.08.2020–ன்படி கணக்கெடுப்பு பணிகள் செய்ய அலுவலர்கள் நியமிக்கப்பட்டு முறையற்ற குடிநீர் குழாய் இணைப்புகள் 869 எண்ணிக்கையில் கண்டறியப்பட்டது.

மேற்படி கண்டறியப்பட்ட முறையற்ற குடிநீர் இணைப்புகளை முறைப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.10974/20014/ஆ3 நாள்.17.07.2014ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறும் அரசாணை நிலை எண்.65 நாள்.12.04.2010–ன்படியும், மாவட்ட அரசிதழ் எண்.2, நாள்.27.03.2020–ன்படி முறையற்ற குடிநீர் இணைப்புகளை முறைப்படுத்த திருமுருகன்பூண்டி பேரூராட்சியின் தீர்மான எண்.948/2020 நாள்.23.12.2020–ன்படி முறையற்ற குடிநீர் இணைப்புகள் முறைப்படுத்த கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டு 869 முறையற்ற குடிநீர் குழாய் இணைப்புதாரர்களும் விண்ணப்ப கட்டணம், வைப்பு தொகை, அபராத தொகை, சென்டேஜ் கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்தி முறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் தற்போது நகராட்சியாக செயல்பட்டு வரும் நிலையில் தன்னிச்சையாக செயல்பட்டு நகராட்சியின் அனுமதியின்றி ஒப்பந்ததாரர் மூலம் 18–வது வார்டு ராஜ்குமார் வீடு மற்றும் 22–வது வார்டு அன்பு இல்லம் அருகில் குடிநீர் குழாய் அமைக்கப்பட்டது

கண்டறியப்பட்டவுடன் நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் ஆகியோர் நேரடியாக ஆய்வு செய்து, முறையற்ற குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

வார்டு எண்.1ல் புதியதாக அமைக்கப்பட்டுள்ள செர்ரீ பிளாசம் மனைப்பிரிவு பகுதியில் மனை விற்பனையாளர் மூலம் மெயின் குழாய் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. இம்மெயின் குழாய் நகராட்சியின் குடிநீர் குழாயுடன் இணைக்கப்படவில்லை.

திருமுருகன்பூண்டி நகராட்சியில் முறையற்ற குடிநீர் குழாய்களை முறைப்படுத்தும் முன்பு 8346 குடிநீர் குழாய் இணைப்புகளும், 869 முறையற்ற குடிநீர் குழாய்களை முறைப்படுத்திய பின்னர் 9215 இணைப்புகளும் உள்ளது. முறையற்ற குடிநீர் குழாய் இணைப்புகள் கண்டறியப்பட்டு முறைப்படுத்தவும், வீட்டு வரி இல்லாத வீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்பை துண்டிப்பு செய்யவும் தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் திருமுருகன்பூண்டி நகராட்சி ஆணையரும் 26.07.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.07.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.P.சுப்பிரமணியம், 26.07.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வரும் தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''திருமுருகன்பூண்டி நகராட்சியில் வீடுகளுக்கான குடிநீர் இணைப்புகள் பெருமளவில் முறைகேடாக கொடுக்கப்பட்டுள்ளன. கடந்த பத்து ஆண்டுகளாக முறைகேடுகள் அந்நகராட்சியில் நடந்து வருகிறது. ஒவ்வொரு இணைப்புக்கும் ரூ 25,000/– வரை பெற்றுக்கொண்டு சட்டத்திற்கு புறம்பாக நகராட்சி குழாய் பொருத்துநர், இணைப்புகளை கொடுத்துள்ளார். இந்நேர்வில் அங்கு பணியாற்றிய நகராட்சி அலுவலர்கள், முந்தைய ஆணையர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர். இதனால் நகராட்சிக்கு பலகோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இம்முறைகேடு தொடர்பாக நகராட்சியிலும், மாவட்ட ஆட்சியரிடமும் பல்வேறு மனுக்கள் அளிக்கப்பட்டதில் சுமார் 850 முறையற்ற இணைப்புகள் கண்டறியப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. சட்டத்திற்கு புறம்பான வகையில் குடிநீர் இணைப்புகள் பெற்றுள்ள மற்ற நபர்களின் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. திருமுருகன் பூண்டி நகராட்சியில் சட்டத்திற்கு புறம்பாக குடிநீர் இணைப்புகளை கொடுத்து அங்குள்ள தொழிற்சாலைகள் மற்றும் தோட்டங்கள் போன்றவற்றிற்கு குடிநீர் உபயோகப்படுத்தப்படுவதால் அங்குள்ள வீடுகளுக்கு நகராட்சியால் முறையாக குடிநீர் விநியோகம் செய்யப்படுவதில்லை. 12 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

எனவே, திருமுருகன்பூண்டி நகராட்சியில் நூற்றுக்கணக்கில் சட்டத்திற்கு புறம்பாக குடிநீர் இணைப்புகளை வழங்கிய குழாய் பொருத்துனர் மற்றும் சம்பந்தப்பட்ட நகராட்சி அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும், திருமுருகன்பூண்டி நகராட்சியில் முறையாக குடிநீர் விநியோகம் செய்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது 26.7.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவுசெய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களின் நகல்கள் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) மனுதாரர் திரு.P.சுப்பிரமணியம் தனது 26.07.2022 நாளிட்ட மனுவில் கீழ்காணும் விவரங்களை தெரிவித்துள்ளார்.

''திருப்பூர் மாவட்டம், திருமுருகன்பூண்டி நகராட்சி 2022–க்கு முன் பேரூராட்சியாக இருந்த பொழுது முறையான குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை 8346 மட்டுமே இருந்தது. கடந்த 2011 முதல் 2021 வரை 1500–க்கும் அதிகமான குடிநீர் இணைப்புகள் முறைகேடாக கொடுக்கப்பட்டுள்ளது. அப்போது செயல் அலுவலர்களாக திரு. நந்தகோபால், திரு. சம்பத் நாயுடு, திரு. குணசேகரன், திரு. ஈஸ்வரமூர்த்தி, திரு. ஆனந்த் ஆகியோரும் 2011 உள்ளாட்சி தேர்தலில் திருமதி. லதா சேகர் வெற்றி பெற்று 3 மாதங்களில் குடும்பப்பணி காரணமாக ராஜினாமா செய்த பின் 2014–ல் நடைபெற்ற இடைத்தேர்தலில் திரு. பழனிசாமி ஆகியோரும் வெற்றி பெற்று தலைவராக இருந்து செயல்பட்டு வந்தனர்.

வாரம் ஒருமுறை வந்து கொண்டிருந்த குடிநீரானது முறையற்ற இணைப்புகள் அதிகமானதால் 15 நாட்களுக்கு ஒருமுறை என மாறியது. கட்டணம் கட்டும் குடிநீர் இணைப்பாளர்களுக்கு பெரும் சிரமம் ஏற்பட்டது. அதே சமயம் முறைகேடாக இணைப்பு போட்டுக் கொண்டவர்கள் கட்டணம் எதுவும் கட்டாமல் பல ஆண்டுகளாக தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்தார்கள். பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய டெபாசிட், சென்ட்டேஜ், குடிநீர் கட்டணம் என பல கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு காரணமாக இருந்த அதிகாரிகள், அரசியல்வாதிகள், பிளம்பர்களை கண்டறிந்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுமக்களின் பலகட்டப் போராட்டங்களுக்குப் பிறகு செயல் அலுவலர் திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்களின் பதவிக் காலத்தில் குழு அமைத்து, முறைகேடுகளை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டதில் சுமார் 850 இணைப்புகள் கண்டறியப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது.

இன்னும் பல இணைப்புகள் கண்டறியப்படாமல் உள்ளது. முறையாக குடிநீர் இணைப்பு பெற பொதுமக்கள் பலர் காத்துக்கொண்டிருக்கின்றனர். தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு நடைபெற்ற முதல் மன்றக் கூட்டத்திலேயே 7 நாட்களுக்குள் முறைகேடுகளைக் கண்டறிந்து, குழாய் இணைப்பை துண்டித்து அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும் என நகராட்சி கமிஷனர் உறுதி அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, நகராட்சி முழுவதும் உள்ள நகர்ப்புற ஏரியாக்களில் உள்ள வீடுகளுக்கு கண்டிப்பான அதிகாரிகள் கொண்ட குழு அமைத்து பரிசோதனை செய்து, தவறு கண்டறியப்படும் வீட்டு உரிமையாளர்களிடம் ''யாருடைய உத்தரவாதத்தின் பேரில் எந்த பிளம்பரை வைத்து குழாய்

போட்டீர்கள்'' என கேட்கும் பட்சத்தில் அவர்கள் மறுத்தால் "உங்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்'' என கூறினால் உண்மையான குற்றவாளிகள் யார் என கூறி விடுவார்கள்.

இதுவரை முறைகேடாக குடிநீர் போட்டவர்கள் 867 பேர் அபராதமாக தலா 27,637.00 ரூபாய் கட்டியுள்ளனர். ஆனால் இந்த முறைகேட்டிற்கு துணை போனவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. இன்னும் அபராதம் கட்டாமல் பல நூறுபேர், நகராட்சிக்கு வருமான இழப்பை ஏற்படுத்தி வருகின்றனர்.

தற்போது நகராட்சியில் சொத்துவரி விதிப்பு எண்ணிக்கை : 13,612

| | | |
|---|---|---|
| 2011 வரை முறையாக குடிநீர் இணைப்பு பெற்றவர்கள் | = | 8346 பேர் |
| அபராதம் கட்டி முறைப்படுத்தியவர்கள் | = | 867 பேர் |
| முறையாக குடிநீர் இணைப்பு வேண்டும் என விண்ணபத்துள்ளவர்கள் | = | 1231 பேர் |
| குடிநீர் தேவை வேண்டாதவர்கள் சுமார் (கடைகள் வணிக நிறுவனங்கள்) | = | 1500 பேர் |
| மொத்தம் | = | 11944 |

13612–ல் 11944 போக இன்னும் 1668 வரி விதிப்புகளில் முறைகேடான இணைப்புகள் இருக்கலாம் என சந்தேகம் வருகிறது.

மேலும் தற்சமயம் 22.07.2022–ஆம் தேதியன்று பூண்டி நகராட்சிப் பகுதியில் 15–வது வார்டில் ஒரு தோட்டத்தில் உள்ள ஒரே வீட்டிற்கு 8 வரி விதிப்புகள் செய்து 10 குடிநீர் இணைப்புகள் முறைகேடாக போடப்பட்டுள்ளதை நாங்கள் கண்டுபிடித்து சொன்னதின் பேரில் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. ஆனால் நடவடிக்கை எடுக்க மறுக்கிறார்கள். இது மாதிரி இன்னும் நூற்றுக்கணக்கான குழாய்கள் முறைகேடாக போடப்பட்டுள்ளது.

குழாயே போடாமல் அபராதம் கட்டி விட்டு பிறகு குழாய் போட்டுக்கொள்ளும் ஏற்பாடுகளும் உள்ளது. எனவே, நேர்மையான குழுக்கள் அமைத்து வீடுகளுக்கு சென்று ஆய்வு செய்து முறையற்ற இணைப்பு பெற்றவர்கள் மீதும் 2011 முதல் இதற்கு உறுதுணையாக இருந்துள்ள அதிகாரிகள் அரசியல்வாதிகள், பிளம்பர்கள் மீதும் சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) எதிர்மனுதாரான திருமுருகன்பூண்டி நகராட்சி ஆணையராக பணிபுரியும் திரு. முகம்மது சம்சுதீன் மற்றும் வரி வசூலராகப் பணியாற்றும் திரு. அ. ராஜகோபால் ஆகியோர் 26.07.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

"திருமுருகன்பூண்டி நகராட்சியில் மொத்தம் 13,612 வீடுகள் உள்ளன. இவ்வீடுகளில் 9,215 குடிநீர் இணைப்புகள் உள்ளன. இவ்வீடுகளில் முறையான குடிநீர் இணைப்புகள் 8346 ஆகும். 869 இணைப்புகள் முறைபடுத்தப்பட்டுள்ளன. தற்போது திருமுருகன்பூண்டி நகராட்சியில் 9215 இணைப்புகள் உள்ளன. மேலும் முறையற்ற குடிநீர் குழாய் இணைப்புகளை கண்டறிந்து அவற்றை முறைபடுத்த தற்சமயம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் திருமுருகன்பூண்டி நகராட்சி ஆணையரான எனது 20.7.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

(7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, மற்றும் விசாரணையின் போது அளித்த வாக்குமூலம், திருமுருகன்பூண்டி நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, ஆணையர் மற்றும் வரிவசூலர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

❖ 16.12.2021 அன்று முதல், நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட திருமுருகன்பூண்டி பேரூராட்சியாக செயல்பட்ட கால கட்டமான 2011 ஆம் ஆண்டு முதல் 2021 வரையிலான 10 ஆண்டுகளில் பேரூராட்சிக்குட்பட்ட வீடுகளுக்கு பேரூராட்சியின் அனுமதியின்றி குடிநீர் இணைப்புகள் முறைகேடாக நூற்றுக்கணக்கில் வழங்கப்பட்டுள்ளன என்பதை மனுதாரரின் புகாரின் மூலம் அறிய முடிகிறது.

❖ திருமுருகன்பூண்டி பேரூராட்சியானது 15.12.2020 நாளிட்ட அறிவிப்பில், முறைகேடாக குடிநீர் இணைப்பு பெற்றவர்கள் சொத்துவரி இரசீதுடன் அபராதத் தொகையும் உரியக் கட்டணமும் செலுத்தி முறைப்படுத்திடலாம் என பொது மக்களுக்கு அறிவிப்பு வழங்கியுள்ளது. இதன்படி பேரூராட்சியில் குடிநீர் இணைப்பு வழங்கியதில் பெரும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன என்பது தெரியவருகிறது.

❖ பேரூராட்சியின் அனுமதியின்றி முறைகேடாக குடிநீர் இணைப்பு பெற்றவர்கள், நிர்வாகத்திற்கு பல ஆண்டுகளாக எவ்வித குடிநீர் கட்டணங்களும் செலுத்தவில்லை என்பதால் நிர்வாகத்திற்கு பெரும் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது.

❖ சில குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளில் உடனடியாக குடிநீர் இணைப்பை பெற வேண்டும் என்கிற உந்துதலில், தங்களது வீடுகளில் பேரூராட்சியின் அனுமதியின்றி குடிநீர் இணைப்பு பெற்றிருப்பதாக தவறான தகவல் அளித்து, அபராதக் தொகையினை செலுத்தி பின்னர் குடிநீர் இணைப்புகள் பெற்றுள்ளதையும் மனுதாரரின் புகார் மூலம் அறியமுடிகிறது.

- ❖ சில வீடுகளில் சட்டத்திற்கு புறம்பாக அதிக எண்ணிக்கையிலான குடிநீர் இணைப்புகள் பெறப்பட்டு குடிநீரை தோட்டங்களுக்கும், தொழிற்சாலைக்கும் பயன்படுத்தப்பட்டிருப்பதன் விளைவாக, முறையாக குடிநீர் இணைப்பு பெற்ற குடியிருப்புகளுக்கு சீராக குடிநீர் விநியோகம் வழங்கப்படுவதில்லை என மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

- ❖ சொத்துவரி இல்லாத வீடுகளுக்கும் முறைகேடாக குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்பதனை விசாரணையில் அறியமுடிகிறது.

- ❖ திருமுருகன்பூண்டி நகராட்சியில் மொத்தம் உள்ள 13612 வீடுகளில், முறையான குடிநீர் பெற்ற இணைப்புகளின் எண்ணிக்கை 8346. முறைகேடாக இணைப்பு பெற்றபின், முறைப்படுத்தப்பட்ட இணைப்புகள் 869 என ஆக மொத்தம் 9215 இணைப்புகள் உள்ளன என்பதை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறியமுடிகிறது.

- ❖ சமீபத்திலும் திருமுருகன்பூண்டி நகராட்சிக்குட்பட்ட சில பகுதிகளில் குடிநீர் இணைப்பே இல்லாதவர்கள் அபராதம் செலுத்தி அதன்பின் நகராட்சியின் பிளம்பர் மூலம் 300 அடி நீளத்திற்கு முறைகேடாக குழாய் இணைப்பு போடப்படுவதை கண்டறிந்து, அவற்றை நகராட்சி நிர்வாகத்தினர் அகற்றியுள்ளது விசாரணையில் தெளிவாகிறது.

- ❖ திருமுருகன்பூண்டி பேரூராட்சியாக செயல்பட்ட காலத்தில், பெரும்பாலான வீடுகளுக்கு நிர்வாக அனுமதியின்றி முறைகேடாக குடிநீர் இணைப்புகள் வழங்கியதை பேரூராட்சியின் செயல் அலுவலர்கள் கண்காணித்து உடனுக்குடன் ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொண்டும் மற்றும் காவல்துறை மூலம் புகார் அளித்தும் நடவடிக்கை மேற்கொண்டிருந்தால், இவ்வாறு பெருமளவில் முறைகேடுகள் நடைபெற்று இருப்பதை தவிர்த்திருக்கலாம். அவ்வாறின்றி, முறைகேடுகள் பல ஆண்டுகளாக தொடர்ந்து நீட்டித்து இருப்பது பேரூராட்சியில் பணிபுரிந்த பேரூராட்சியின் செயல் அலுவலர்கள் மற்றும் பிளம்பர்களின் உறுதுணையுடன் நடந்திருக்க வாய்ப்பு உள்ளதாகவே இம்முறைமன்றம் கருத வேண்டியுள்ளது. இவர்களின் இச்செயலினை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாக கண்டிப்பதுடன், இம்முறைகேடுகளுக்கு காரணமாக கருதப்படும் பேரூராட்சியில் பணிபுரிந்த பிளம்பர்கள், பேரூராட்சியின் செயல் அலுவலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் இதுகுறித்து காவல்துறையில் புகார் செய்து உரிய குற்றவியல் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் நகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

- திருமுருகன்பூண்டி நகராட்சியில் முறைகேடான குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கியுள்ளதை கண்டறிய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தலைமையின் கீழ் ஒரு குழுவினை அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். அக்குழுவின் மூலம் நகராட்சியின் அனைத்து வீடுகள் தோறும் கள ஆய்வு செய்து, சொத்துவரி ரசீதுடன் ஒப்பிட்டு முறையாக குடிநீர் இணைப்பு பெறப்பட்டுள்ளதா என்பதையும், அவ்வாறு இல்லையெனில், முறையற்ற குடிநீர் இணைப்புகளை முறைப்படுத்தும் போது, குடிநீர் இணைப்பு தொடர்பான விண்ணப்பக் கட்டணம், வைப்பு தொகை, கடும் அபராதத் தொகை, சென்டேஜ் கட்டணம், குடிநீர் கட்டணம் மற்றும் குடிநீர் இணைப்பு தொடர்பான அனைத்துக் கட்டணங்களும் வசூலிக்கப்பட வேண்டும். குடிநீர் இணைப்பு பெறப்பட்டு, சொத்துவரி விதிக்கப்படவில்லையெனில், சொத்துவரி விதிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இக்குழுவானது முறைகேடான குடிநீர் இணைப்புகளை கண்டறிந்து 3 மாத கால அளவிற்குள் முறைப்படுத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். முறைப்படுத்திய குடிநீர் இணைப்புகளுக்கு உரிய கேட்பினை (Demand) எழுப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். இதுகுறித்தான அறிக்கையை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைத்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

- நகராட்சியின் ஒப்பந்த ஊழியரான பிளம்பர் திருமுருகேசன் என்பவர் திருமுருகன்பூண்டி நகராட்சியின் 26.05.2022 அன்று நகராட்சியின் 22வது வார்டில் உள்ள ரிங்ரோட்டில் 300 அடி நீளத்திற்கு குழாய் அமைத்து, முறைகேடாக குடிநீர் இணைப்பு பணியை மேற்கொண்டிருந்ததை அறிந்த நகராட்சியின் நகர்மன்றத் தலைவர் மற்றும் ஆணையாளர் ஆகியோர் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுத்து 27.05.2022 அன்று குழாய் அகற்றப்பட்டுள்ளது. முறைகேடான குழாய் இணைப்புகளுக்கு நகராட்சியின் ஒப்பந்தப் பணியில் உள்ள பிளம்பர் முறைகேட்டில் ஈடுபட்டிருக்கும் சமயத்தில் கையும் களவுமாக பிடிக்கப்பட்டிருப்பது ஆவணங்களின் மூலம் உறுதியாகிறது.

- திருமுருகன்பூண்டி நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பிளம்பர் திரு. முருகேசன் என்பவர் இவ்வாறு முறைகேடாக குடிநீர் இணைப்புகள் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கையும் களவுமாக பிடிக்கப்பட்ட சமயத்திலேயே அவரது ஒப்பந்தப் பணியை இரத்து செய்யாமலும், அவர் மீது காவல் துறையில் புகார் அளித்து குற்றவியல் நடவடிக்கையினை நகராட்சியின் ஆணையாளர் மேற்கொள்ளாமலும் இருந்த செயலினை இம்முறைமன்ற நடுவம் மிகவும் கடுமையாக கண்டிக்கிறது. நகராட்சியின் சில வார்டுகளில் தன்னிச்சையாக நகராட்சியின் அனுமதியின்றி பிளம்பர் மூலம் முறைகேடாக குடிநீர் இணைப்பு குழாய்கள் போடுவதை வார்டு உறுப்பினர்கள் கண்டறிந்து நகராட்சியில் புகார் செய்தபின், நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்ட செயலானது நகராட்சி அலுவலர்களின் மெத்தன போக்கையும், பணியில் அலட்சியத்தையும் காட்டுகிறது.

❖ எனவே முறைகேடாக குடிநீர் இணைப்புகளை வழங்கிய திருமுருகன்பூண்டி நகராட்சியின் ஒப்பந்த ஊழியரான பிளம்பரின் ஒப்பந்தத்தை ரத்து செய்தும், இம்முறைகேடு குறித்து காவல்துறையில் புகாரளித்து உரிய குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் நகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் இம்முறைகேடுகளுக்கு சாதகமாக செயல்பட்டுள்ள நகராட்சியின் அலுவலர்களின் மீதும் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படியும் நகராட்சி நிர்வாக இயக்குநரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

❖ பொது மக்களிடமிருந்து புதிய குடிநீர் இணைப்புகள் கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் மூப்புவரிசை அடிப்படையில் (Order of Seniority) பரிசீலித்து, காலதாமதமின்றி உடனடியாக குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டிருந்தால், இம்மாதிரி பெரும் முறைகேடுகள் தவிர்க்கப்பட்டிருக்கும். இனி வரும்காலங்களில் இவ்வாறு முறைகேடுகளுக்கு இடமளிக்காத வகையில் குடிநீர் இணைப்பு கோரும் நேர்வுகளுக்கு 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி, உடனுக்குடன் குடிநீர் இணைப்புகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி திருமுருகன்பூண்டி நகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

❖ மேலும், குடிநீர் குழாய் பழுது போன்ற நிகழ்வுகளிலும் பொதுமக்களை அலைக்கழிக்காமல் பொது மக்களிடமிருந்து பெறப்படும் பழுது நீக்க விண்ணப்பங்களை பெற்று, உடனடியாக கட்டணங்களை நிர்ணயித்து, குடிநீர் குழாய் பழுது நீக்குவதற்கான நடவடிக்கைகளையும் காலதாமதமின்றி உடனுக்குடன் செய்து தர நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

❖ இவ்வாறு நகராட்சிகளில் குடிநீர் இணைப்புகளில் முறைகேடுகள் நடப்பதை தடுக்கும் வண்ணம், ஒரே நகராட்சியில் பல ஆண்டுகளாக பணிபுரியும் பிளம்பர்கள் மற்றும் பிட்டர்களை வெவ்வெறு நகராட்சிகளுக்கு பணியிடமாறுதல் செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்கிறது.

2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 04–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.P.சுப்பிரமணியம், நகர்மன்ற உறுப்பினர்,
ஜீவா படிப்பகம், மெயின் வீதி,
திருமுருகன்பூண்டி போஸ்ட்,
அவிநாசி வட்டம், திருப்பூர் மாவட்டம் – 641 652.

2) ஆணையாளர், திருமுருகன்பூண்டி நகராட்சி,
திருப்பூர் மாவட்டம் – 641 652.

3) பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை 28.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

05/08/22

செயலாளர்

05/08/22